# சாற்றுமுறை க்ரமம் (in Bahrain)

தத்விஷ்ணோ: பரமம் பதகும் ஸதா பஶ்யந்தி ஸூரய:| திவீவ சக்ஷுராததம் ||
தத்விப்ராஸோ விபங்யவோ ஜாக்ருவாகும் ஸஸ்ஸமிந்ததே|விஷ்ணோர் யத்பரமம் பதம் ||
பர்யாப்த்யா அநந்தராயாய ஸர்வஸ்தோமோதி ராத்ர உத்தம மஹத்பவதி |
ஸர்வஸ்யாப்த்யை ஸர்வஸ்ய ஜித்யை ஸர்வமேவ தேநாப்நோதி ஸர்வம் ஜயதி ||

அகலகில்லேன் இறையும் என்றலர்மேல் மங்கையுறைமார்பா,
நிகரில் புகழாய்! உலக மூன்றுடையாய்! என்னை ஆள்வானே,
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே,
புகலொன்றில்லா அடியேனுன் அடிக்கீழமர்ந்து புகுந்தேனே. 6.10.10

அடிக்கீழமர்ந்து புகுந்தடியீர்!வாழ்மின்‘ என்றென்றருள்கொடுக்கும்
படிக்கேழில்லாப் பெருமானை பழனக் குருகூர்ச் சடகோபன்,
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் திருவேங்கடத்துக்கிவைபத்தும்,
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரிய வானுள் நிலாவுவரே. 6.10.11

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு,பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா, உன் சேவடி செவ்விதிருக் காப்பு!

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு,
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு,
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு,
படைப்போர் புக்கு முழங்கும் அப் பாஞ்ச சன்னியமும் பல்லாண்டு.

ஸர்வதேஶ தஶாகாலேஷு அவ்யாஹத பராக்ரம
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்.

ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸர முஜ்வலா
திகந்தவ்யா பிநீபூயாத் ஸாஹிலோக ஹிதைஷிணீ

ஸ்ரீமந் ஸ்ரீரங்க ஶ்ரியமநுபத்ரவாம் அநுதிநம்ஸம்வர்த்தய
ஸ்ரீமந் ஸ்ரீரங்க ஶ்ரியமநுபத்ரவாம் அநுதிநம்ஸம்வர்த்தய.

நமோ ராமாநுஜார்யாய வேதாந்தார்த்த ப்ரதாயிநே
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணசாலிநே.

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்ய பூஷணம்
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஸிகம்.

வாழி இராமாநுசப்பிள்ளான் மாதகவால்,
வாழும் அணிநிகமாந்தகுரு,--வாழியவன்
மாறன் மறையும் இராமாநுசன் பாஷியமும்,
தேறும் படியுரைக்கும் சீர்.

வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே,
மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன் வாழியே,
கஞ்சத் திருமங்கை உகக்கவந்தோன் வாழியே,
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே,
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே,
திருமலைமால் திருமணிமாய்ச் சிறக்கவந்தோன் வாழியே,
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே,
செந்தமிழ்த் தூப்புல் திருவேங்கடவன் வாழியே.

நானிலமும் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ,
மாநகரின் மாறன் மறைவாழ,--ஞானியர்கள்
சென்னியணி சேர் தூப்பூல் வேதாந்த தேசிகனே!
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

வாழியணி தூப்புல் வருநிகமாந் தாசிரியன்
வாழியவன் பாதாரவிந்தமலர்--வாழியவன்
கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்.

நமஶ் ஶ்ரீஶைல நாதாய குந்தீ நகர ஜன்மனே
ப்ரஸாத லப்த பரமப்ராப்ய கைங்கர்ய ஶாலினே

ஶ்ரீஶைலேஶ  தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ர ப்ரணவம் வந்தே ரம்யஜா மாதரம்முநிம்

வாழி திருவாய் மொழிப்பிள்ளை மாதகவால்,
வாழும், மணவாள மாமுனிவன்,--வாழியவன்
மாறன் திருவாய் மொழிப்பொருளை மாநிலத்தோர்,
தேறும் படியுரைக்கும் சீர்.

செய்ய தாமரைத் தாளிணை வாழியே,சேலை வாழி திருநாபி வாழியே,
துய்ய மார்பும் புரிநூலும் வாழியே,சுந்தரத் திருத்தோளிணை வாழியே,
கையுமேந்திய முக்கோலும் வாழியே,கருணை பொங்கிய கண்ணிணை வாழியே,
பொய்யிலாத மணவாள மாமுனி,புந்திவாழி புகழ் வாழி வாழியே!.

அடியார்கள் வாழ அரங்க நகர் வாழ,
சடகோபன் தண்தமிழ் நூல் வாழ – கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே,
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

## ஆண்டாள் வாழி திருநாமம்

கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழும் ஊர்
சோதி மணிமாடம் தோன்றும் ஊர்–நீதியால்
நல்ல பத்தர் வாழும் ஊர்,நான்மறைகள் ஓதும் ஊர்
வில்லிபுத்தூர் வேதக் கோனூர்

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும்–கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதூஉம் வம்பு.

திருவாடிப் பூரத்து ஜெகத்துதித்தாள் வாழியே!
திருப்பாவை முப்பதூஉம் செப்பினாள் வாழியே!
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே!
பெரும்பூதூர் மாமுனிக்கு பின்னானாள் வாழியே!
ஒரு நூற்று நாற்பத்து மூன்று உரைத்தாள் வாழியே!
உயர் அரங்கர்க்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே!
மருவாரும் திருமல்லி வளநாடு வாழியே!
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே!

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகர் ஜீயர் திருவடிகளே சரணம்